**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண். 161** **நாள் : 16.10.2018**

## உலக கைகழுவும் தினத்தை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் கைகழுவும் முறை குறித்து விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பாக, சென்னை மாநகரம் முழுவதும் கல்வி நிறுவனங்கள், குடிசைப் பகுதிகள், தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்கள், பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் நோய்த்தடுப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

உலகில் பெரும்பாலான நோய்கள் சுற்றுப்புற சுகாதாரம், தூய்மை மற்றும் தன் சுத்தம் போன்றவற்றை முறையாக கடைபிடிக்காமல் இருத்தலால் ஏற்படுகிறது. இதில் குழந்தைகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையில் முறையாக சோப்பு உபயோகித்து கைகழுவதன் மூலம் 50% வயிற்றுப்போக்கு, 25% நிமோனியா காய்ச்சல், டைஃபாய்டு காய்ச்சல், மஞ்சள் காமாலை, சாதாரணமான சளித்தொல்லை, சுவாச தொற்றுநோய்கள், பன்றிக்காய்ச்சல், காலரா, வயிற்றுப் பூச்சிகள், தோல் மற்றும் கண் சம்பந்தப்பட்ட நோயிலிருந்தும் பொதுமக்கள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக தண்ணீரை மட்டும் உபயோகித்து கைகளை கழுவுவதினால் நோய்க் கிருமிகளை அழிக்க முடியாது.

இதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக உலக கை கழுவும் தினமான 15.10.2018 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பில் மண்டல சுகாதார அலுவலர்கள் தலைமையில் துப்புரவு அலுவலர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கொண்ட குழுவால் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள 200 சென்னை பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் பயிலும் சுமார் 1 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு முறையாக கைகழுவும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அனைத்து பள்ளிகளிலும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதில் சிறப்பு நிகழ்வாக கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட என்.எஸ்.கே சாலையில் உள்ள புலியூர், சென்னை மேல்நிலைப்பள்ளி மற்றும் சென்னை தொடக்கப்பள்ளியில் கைகழுவும் முறை குறித்து விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இங்கு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு முறையாக கை கழுவுவதினால் எவ்வாறு தொற்றுநோய்கள் வராமல் தடுக்க முடியும் என்று விளக்கப்பட்டு, செய்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. மாணவ மாணவியர்கள் அனைவரும் முறையாக கை கழுவி பயிற்சி எடுத்துக் கொண்டனர். இதனை தொடர்ந்து கடைப்பிடித்து தங்கள் வீட்டிலும், அருகாண்மையில் உள்ளவர்களிடம் எடுத்துக் கூறி, விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகவும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மண்டல அலுவலர் திரு.S.நடராஜன், சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி. சீனிவாசன், மண்டல சுகாதார அலுவலர் மருத்துவர் A. சுகன்யா தேவி, பசுமை படை ஒருங்கிணைப்பாளர் தங்கராஜ், மாநகராட்சி அலுவலர்கள், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**